2021 பிப்ரவரி 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு துணை மின் நிலையம் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரிடத்தில் மனுக்களை வழங்கி, அதற்குத் தேவைப்படும் நிலமும் பெருங்கூர் ஊராட்சியிலே தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. தெரிவு செய்யப்பட்ட இடத்திலே உடனடியாக ஒரு துணை மின் நிலையம் அமைத்து தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்த இடத்திலே 3¾ ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றது. 110/22 K.V. துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. விரைந்து அந்தப் பணிகள் முடிந்து, வேலைகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

12—

தார்ச்சாலை

***3043—திரு. கே. பழனி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் ஒன்றியம், மலையம்பாக்கம் தெருக்களில் சிமெண்ட் சாலை அல்லது தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2021 பிப்ரவரி 5

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், மலையம்பாக்கம் ஊராட்சியில் பழுதடைந்த 5.60 கிலோ மீட்டர் நீள சாலைகளில் இதுவரை 2.55 கிலோ மீட்டர் நீளமுள்ள 11 சாலைகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 78 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.*

திரு. கே. பழனி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக நிறுவனத் தலைவர், பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். என்னை வளர்த்து ஆளாக்கிய இதய தெய்வம், கழகத்தின் காவல் தெய்வம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளராக இருந்து, இந்த மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் மனதில் மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கிற ஒரே தலைவர் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். என்னுடைய தொகுதியில் 2017 ஆம் ஆண்டில் குடிமராமத்துப் பணிகளைத் துவக்கி வைத்து, குடிமராமத்து நாயகன் என்ற பட்டம் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய அரசாங்கத்தால் தமிழ்நாடு முதன்மை மாநிலம் என்ற விருதைப் பெறச்செய்து, சிறப்பான முதலமைச்சராகப் பணியாற்றுகின்ற மக்கள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். கழக ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்ட அமைச்சர் அண்ணன் திரு. பா. பென்ஜமின் அவர்களையும் வணங்குகிறேன்.*

எங்களுடைய தொகுதியில், மிகப் பெரிய நகராக உருவாக்கப்பட்ட மலையம்பாக்கம் பகுதியில் எத்தனை கோடி ரூபாய் செலவிட்டாலும் சாலைகள் போட முடியவில்லை. அப்பேர்ப்பட்ட ஊராட்சியாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்த ஊராட்சியில் கிட்டத்தட்ட 17 நகர்கள் அமைக்கப்பட்டு,

2021 பிப்ரவரி 5]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் சில வேலைகளை செய்திருக்கிறோம். வசந்தம் நகர், திடீர் நகர், ஸ்ரீனிவாசன் நகர், வடக்கு மலையம்பாக்கம், தெற்கு மலையம்பாக்கம், அனு கார்டன், அதேபோல் மாடம்பாக்கம் ஊராட்சியில் வள்ளலார் நகர், மாணிக்கபுரம், வரதராஜபுரம் எனமீதம் 52 தெருக்கள் அங்கே மிக மோசமாக இருக்கின்ற காரணத்தினால், அதை ஆய்வு செய்து, அந்த இடத்திலே தார்ச்சாலை அல்லது சிமென்ட் சாலை அமைத்துத் தருமாறு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், மலையம்பாக்கம் ஊராட்சியில் 56 கிலோ மீட்டர் நீளத்திற்கு மொத்தம் 110 சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஊராட்சியில் பழுதடைந்த கிட்டத்தட்ட 5.60 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளில் நடப்பாண்டில் இதுவரை 2.55 கிலோ மீட்டர் நீளமுள்ள 11 சாலைகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், 78 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டிருக்கின்றன. தற்போது, 5—வது நிதிக் குழு மானியத்தின்கீழ், 0.83 கிலோ மீட்டர் நீளமுள்ள 2 சாலைகள் 41 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தார்ச்சாலைகளாக மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 2.21 கிலோ மீட்டர் நீளமுள்ள 7 சாலைகள் நடப்பாண்டில் ஒருங்கிணைந்த, ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியின்கீழ், 1 கோடியே 93 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சிமென்ட் சாலைகளாக மேம்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், இன்னும் சில ஊராட்சிகளைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதுவும் கண்டிப்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[*2021 பிப்ரவரி 5*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.*

திரு. கே. பழனி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் பெய்த மழையின் காரணமாக, வரதராஜபுரம் கிராமத்தில், வெள்ளம் சூழ்ந்து அலைகடலென காட்சியளித்தது. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் திரு. பென்ஜமின் அவர்களும், வருகை தந்து, இடுப்பளவு தண்ணீரிலே நீந்தி சென்று, அந்த இடத்தை ஆய்வு செய்து, மக்களைச் சந்தித்தார்கள். அந்த இடத்தில் மிக மோசமான நிலை இருந்தாலும்கூட, உள்ளாட்சித் துறை அமைச்சருடைய வேண்டுகோளுக்கிணங்க, இன்றைக்கு தார்ச்சாலை அமைத்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் பகுதியில் நிறைய சாலைகள் அமைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அந்த இடத்திற்கு,* BDO*–க்களை அனுப்பி வைத்து, ஆய்வு செய்து* estimate *தயார் செய்து, அந்தப் பகுதி மக்களுக்கு சாலைகள் அமைத்துத் தருமாறு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, மாடம்பாக்கம் பகுதியில் வள்ளலார் நகரில் 42 தெருக்கள் இருக்கின்றன. அந்த இடத்தில் இதுவரை சாலைகள் எதுவும் போடவில்லை. ஏனென்று சொன்னால், அந்த பஞ்சாயத்தில் பணம் இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் தெரிவித்து, அதற்குண்டான மதிப்பீடுகளைத் தயார் செய்து அந்த இடத்திற்கு சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய அரசு என்பது, மிகச் சிறந்த அரசு என்று, இன்றைக்கு மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இந்த அரசில் உள்ளாட்சித் துறை மிகச் சிறந்த துறையாக விளங்கிக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மழை*

2021 பிப்ரவரி 5]

வெள்ளத்திலே பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருடைய உத்தரவின்பேரிலே, மாண்புமிகு அமைச்சர்கள் உடனடியாக சென்று பார்வையிட்டதாகச் சொன்னார்கள். மழை மட்டும் அல்ல; கஜா புயல் என எந்தப் புயல் வந்தாலும், புயல் வேகத்தில் செயல்படக்கூடிய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் மற்றும் அவருக்கு உறுதுணையாகத் துணை முதலமைச்சர், அண்ணன் ஓ.பி.எஸ் அவர்கள் இருக்கின்ற காரணத்தினால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது எப்படிச் செயல்பட்டோமோ, அதே செயல்பாட்டோடு, இன்றைக்கு வேகமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு ஊராட்சிகள் மற்றும் ஒன்றியங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு அம்மாவுடைய அரசின் வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அண்ணன் அவர்களுடைய உத்தரவின் பேரிலே பல்வேறு சாலைகளை அமைத்திருக்கிறோம். மற்ற மாநிலங்களை விட நம்முடைய தமிழகத்திலே பல்வேறு ஊராட்சி சாலைகள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் வாயிலாக இருநூறு கிலோ மீட்டர் நீள சாலைப் பணிகளை ரூ.83.22 கோடி மதிப்பீட்டில் மேற்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடந்த நான்கு ஆண்டுகளில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் தலைமையிலான அரசால், ஊரகப் பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் வாயிலாக 215 கோடியே, 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 671.33 கிலோ மீட்டர் நீள சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

அதேபோல, ஊராட்சியிலே பொது நிதியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பொது நிதி சில பஞ்சாயத்துகளிலே குறைவாக இருக்கும். இருந்தாலும்கூட பல்வேறு திட்டங்களின் வாயிலாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோதிலும்சரி, நமது

[2021 பிப்ரவரி 5

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகும் அம்மா அவர்களின் அரசு நிதியினை ஒதுக்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலையும் அவசியம் இருப்பின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கண்டிப்பாகக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் காலத்திலே தமிழகம் முழுவதும் ஆதி திராவிடர் குடியிருப்புகளிலே தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டதை நாம் அனைவரும் அறிவோம். அவ்வாறு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் காலம் கடந்து பழுதடைந்த நிலையில் இருந்தபோது தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் உள்ளாட்சித் துறையின் மூலமாக பழுதடைந்த ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு 50,000 ரூபாய் வழங்கி, அந்த வீடுகளை பழுதுபார்ப்பதற்கான ஒரு சிறப்பான திட்டத்தினை கடந்த ஆண்டு அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தின் மூலமாக பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இன்று பயனடைந்துள்ளன. 1980 முதல் 1990 வரை பேரூராட்சிகளில் தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டன. அந்தத் தொகுப்பு வீடுகள் இன்றைய நிலையில் பழுதடைந்துள்ளன. அவற்றின் எண்ணிக்கைக் குறைவு. ஆனால் ஒவ்வொரு பேரூராட்சியிலும் 50 முதல் 100 வீடுகள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன், பேரூராட்சிகளில் பராமரிப்பதற்கு நிதியில்லாத காரணத்தினால், சிறப்பு நிதியினை ஒதுக்கி, பேரூராட்சிகளில் உள்ள தொகுப்பு வீடுகளைக் கணக்கெடுத்து, அவற்றைப் பராமரிப்பு செய்வதற்கான ஒரு சிறப்புத் திட்டத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

2021 பிப்ரவரி 5]

வரலாற்றுச்சிறப்புமிக்க ஓர் அறிவிப்பாக அறிவிக்கப்பட்டு, கடந்த 2005–ல் பேரூராட்சிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் கணக்கெடுக்கப்பட்டு பட்டியலானது தயாரிக்கப்பட்டது. அதற்குப்பின் நீண்ட இடைவெளியில் அந்தப் பட்டியலானது புதுப்பிக்கப்படாமல் இருந்தது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதனை கனிவோடு பரிசீலனை செய்து, இன்றையதினம் தமிழகம் முழுவதும் பேரூராட்சிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடியவர்களின் பட்டியலில், புதிதாக நபர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றார்கள். அதற்கான கால அவகாசத்தை அருள்கூர்ந்து 20 நாட்கள் அல்லது ஒரு மாதமாக நீட்டிப்பு செய்து, அனைத்து மாவட்டங்களிலும் இருக்கக்கூடிய A.D. (Town Panchayat) *அலுவலர்களுக்கு மீண்டும் ஒருமுறை அறிவுறுத்தி, அந்தப் பட்டியலில் சேர்ப்பதற்கான வாய்ப்பு மேலும் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என்ற பிரச்சாரத்தை வீடுகள்தோறும் அவர்கள் மேற்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன். கால அவகாசத்தினை ஒரு மாதமாக நீட்டித்து அந்தப் பட்டியலில் ஏழையெளிய மக்கள் அவர்களை இணைத்துக்கொள்வதற்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்று அன்போடு கேட்டு, நன்றி கூறி, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத கேள்வியினைக் கேட்டிருந்தாலும்கூட, தொகுதி மக்கள்மீது அதிக அக்கறை கொண்டு சிறப்பான முறையில் செயல்படக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியினைக் கேட்டுள்ளார்கள். தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலத்திலிருந்து, அண்ணன் எடப்பாடியார் அவர்கள் காலம் வரை ஆதி திராவிடர் காலனிகளில் குடியிருப்பவர்களுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து அந்த வீடுகள் கட்டப்பட்டுவருகின்றன. பேரூராட்சிகளில் பழுதடைந்த வீடுகளைப் பற்றி உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். 1980 முதல் 1990 வரையில் கட்டப்பட்ட வீடுகள் எல்லாம் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. இருந்தாலும், பேரூராட்சிப்

பகுதிகளில் இன்றைக்கு 'அனைவருக்கும் வீடு' என்ற திட்டத்தில் நாம் புதிய வீடுகளைக் கட்டிக் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். இதற்கு முன்னர், பழுதடைந்த வீடுகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு, பழுதுபார்க்கப்பட்டது. சில வீடுகள் பழுதுபார்க்க இயலாத நிலையில் உள்ளன. அந்த வீட்டினைத் தொட்டாலே அது முழுமையாக பாதிப்படையும் நிலையில் உள்ளது. மேற்கூறிய சூழ்நிலையில் ஒருவருக்கு ஒரு வீடுதான் என்ற அடிப்படையில் ஒரு பயனாளிக்குத்தான் கொடுக்க முடியும். பல மாவட்டங்களில் வருவாய்த் துறையுடன் இணைந்து நாங்கள் என்ன செய்துள்ளோம் என்று சொன்னால், அந்தப் பயனாளியின் மகன், மகள் அல்லது மருமகனின் பெயரில் இடம் இருந்தாலும்கூட, அந்த பழுதடைந்த வீட்டினை இடித்துவிட்டு, அந்த இடத்திற்குப் பட்டா மாறுதல் செய்து கொடுத்தால், அவர்களைப் பயனாளிகளாகத் தேர்வு செய்து, அங்கு வீடுகளைக் கட்டிக்கொள்ளலாம். அப்படி ஒரு வாய்ப்பு உள்ளது. அதில் அனைவருக்கும் வீடு என்ற திட்டத்தில் அவர்களுக்கு உடனடியாக ரூ.2,10,000/– கொடுக்கப்பட்டு, வீடு பெற வாய்ப்பளிக்கப்படுகின்றது. குடிசை மாற்று வாரியம்கூட மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் துறையின்கீழ் வருகின்றது, அதில்கூட நாம் எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் உத்தரவிற்கிணங்க அதில் பேரூராட்சிகளுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கிறார்கள். அதனை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம்.

அதுபோல் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள கணக்கெடுப்புப் பற்றி குறிப்பிட்டார்கள். இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று துறை அதிகாரிகளுக்கு உடனடியாக உத்தரவிடப்பட்டு நீட்டிப்பு செய்துதரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.

முற்பகல் 10–30

திரு. பா. நீதிபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். வாழும் காலங்களில் மனித

2021 பிப்ரவரி 5]

புனிதராக வாழ்ந்து இன்றைக்கும் அனைவரது உள்ளங்களிலும், இல்லங்களிலும் தமிழ்த் தாயாக, கருணைத் தாயாக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முன்னாள் முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆத்மாவின் வழிகாட்டுதலின்பேரில் தமிழகத்திலே மக்களுக்கான மக்களாட்சியை, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியை வழிநடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களையும், மாண்புமிகு தமிழகத்தினுடைய துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். உலகமே வியக்கக்கூடிய வகையில், இந்தியாவில் அனைவரும் திரும்பிப் பார்க்கக்கூடிய வகையில், தமிழகத்தில் எங்களுடைய மதுரை மாவட்டத்தில் முதன்முதலாக மனிதப் புனிதர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி முன்னாள் முதல்வர் அம்மா அவர்களுக்கும், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், கோயில் அமைத்து மக்களுடைய பார்வைக்கு அர்ப்பணித்துப் பெருமை சேர்த்திருக்கக்கூடிய எங்களுடைய புறநகர் மேற்கு மாவட்ட கழகத்தினுடைய செயலாளர் மற்றும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களை வணங்கி, மாண்புமிகு அண்ணன் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

உசிலம்பட்டி நகர பேருந்து நிலையம் கழிப்பிட வசதி மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாமல் மிகவும் பழுதடைந்த நிலையில் மக்கள் அனைவரும் பயன்படுத்துவதற்கு சிரமப்படக்கூடிய வகையில் இருக்கிறது. ஆகவே, மக்களுடைய எதிர்பார்ப்புகளையும், கோரிக்கைகளையும் கனிவோடு பரிசீலனை செய்து, அனைத்து அடிப்படை வசதிகளுடன் புதிய பேருந்து நிலையத்தை நவீன முறையில் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்பி அமர்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உசிலம்பட்டி நகரத்தில் பேருந்து நிலையம் பழுதடைந்திருக்கிறது. கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகள் அங்கே*

வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கடைசியாக முடிக்கும்போது புதிய பேருந்து நிலையம் வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். அந்தப் பேருந்து நிலையத்தைப் பழுதுபார்க்க வேண்டுமா அல்லது புதிய பேருந்து நிலையமாக முழுமையாக மாற்ற வேண்டுமா என்பதை துறை அதிகாரிகள் ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலனை செய்யப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. L. இதயவர்மன், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

குளிர்பதனக் கிடங்கு

***51566—திரு. L. இதயவர்மன்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதி, நெம்மேலி மற்றும் சதுரங்கப்பட்டினம் கடற்கரைப் பகுதிகளில் மீன்களைப் பதப்படுத்துவதற்கு குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் தொகுதியிலுள்ள சதுரங்கப்பட்டினம் மீனவ கிராமத்தில் 180 FRP *படகுகளும், நெமிலி கிராமத்தில் 41* FRP *படகுகளும் இயங்குகின்றன. இதன் மூலமாக நாளொன்றுக்கு 3 முதல் 4 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு வருகின்றன. பிடிக்கப்படும் மீன்களைப் பதப்படுத்துவதற்கு ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் 10 டன் கொள்ளளவுக் கொண்ட குளிர்பதனக்*